DVC No.8/2020 - 10-11-2022

எ.ம.சா.1 - சூர்யா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

குறுக்கு விசாரணை:

1) மனுதாரர் என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். 1ம் மனுதாரர் எனது மனைவி, 2 மற்றும் 3 மனுதாரர்கள் எனது குழந்தைகள் என்றால் சரிதான். 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் என் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். நான் எனக்காகவும், மற்ற எதிர்மனுதாரர்களுக்காகவும் சேர்த்து தான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2 முதல் 6 எதிரிமனுதாரர்கள் நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. 4வது எதிர்மனுதாரர் அருளானந்து எங்கு வேலை செய்கிறார் என்றால் கடற்படையில் தொழிற் பாதுகாப்பு பிரிவில் வேலை பார்த்து வருகிறார். 2ம் எதிர்மனுதாரர் ஆசிரியராக கவலைவென்றான் என்ற அரசு மேல்நிலைப் பள்ளியில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் பணச்செல்வி எங்கு வேலை பார்க்கிறார் என்றால் தாணிச்சாவூரணி அங்கன்வாடியில் பணிபுரிகிறார். 5ம் எதிர்மனுதாரர் செல்வம் எங்கு வேலை பார்க்கிறார் என்றால் சொந்த ஊரில் விவசாயம் செய்து வருகிறார்.

2) 6ம் எதிர்மனுதாரர் அற்புத ஜெசிந்தா மேரி எங்கு வசித்து வருகிறார் என்றால் அவர் பெயர் அல்போன்ஸ் மேரி. அவர் தற்போது சென்னையில் வசித்து வருகிறார். 6ம் எதிர்மனுதாரர் சீகூரணியில் சம்பவ நடந்ததாக வீடு கட்டி கொண்டு இருந்தார் என்றால் அந்த இடத்தில் வீடு கட்டவில்லை. தாணிச்சாவூரணி சாலையில் கட்டி உள்ளார்கள். எனது உண்மையான பெயர் சித்திரைச் செல்வன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் அடைக்கலம் என்ற அழகர். எனது தாயார் பெயர் என்ன என்றால் பிச்சையம்மாள் என்ற பார்வதி. எங்களது குடும்பத்தார்கள் மருதாந்தை கிராமத்தில் புனித ஆரோக்கிய அன்னை கெபியை கட்டி உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.

3) நான் இந்து மதத்தைச் சார்ந்தவர் என்று சொல்லி தான் வேலை வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் தற்போது கெஜட்டில் எனது பெயரை மாற்றி விட்டேன். எனது பெயரை கெஜட்டில் மாறுதல் செய்ததற்கான

ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் கிறிஸ்தவ முறைப்படி வாழந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் கிறிஸ்தவ முறைப்படி வாழ்ந்து வருகிறேன் என்றால் இல்லை. இந்து மத முறைப்படி வாழ்ந்து வருகிறேன். நான் கிறிஸ்தவ முறைப்படி ஞானஸ்தானம் பெற்று எனது பங்கில் வாரந்தோறும் வழிபாடுகள் செய்து வருகிறேன் என்றால் இல்லை. எனது பெயர் பதிவுகள் எல்லாம் மருதாந்தை பங்கில் உள்ளது என்றால் சரியல்ல. நான் எவ்வளவு சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால் பிடித்தம் போக ரூ.60,000/-ம் வாங்குகிறேன். எனக்கு சொந்தமாக பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. என்னுடைய பெயரில் இல்லை. ஆனால் எனது தந்தை பெயரில் உள்ளது.

4) நானும், 1ம் மனுதாரரும் கடந்த 2019 ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் பிரிந்து வாழந்து வருகிறோம் என்றால் சரிதான். 2, 3 மனுதாரர்கள் 1ம் மனுதாரரின் பராமரிப்பில் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2019க்கு பின்பு 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நிறைய எடுத்திருக்கினே். காவல் நிலையத்தில் சேர்ந்து வாழ கோரி 1ம் மனுதாரர் மீது நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம்மனுதாரருக்கு சேர்ந்து வாழ கோரி வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. 1ம் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ கோரி நான் நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) நான் எனது மனைவியை சேர்ந்து வாழ கோரி பல முறை பஞ்சாயத்து வைத்தேனா என்றால் வைத்தேன். ஆனால் 1ம் மனுதாரர் தரப்பில் யாரும் வரவில்லை. எந்தெந்த இடத்தில், எந்தெந்த தேதயில் பஞ்சாயத்து வைத்தோம் என்றால் அந்த மாதிரி பேசுவதற்கு 1ம் மனுதாரர் தரப்பில் வரவில்லை. யாரை வைத்து பஞ்சாயத்து பேசினேன் என்றால் முருகராஜ் மற்றும் நண்பர் கடம்பூர் ஊராட்சி மன்ற தலைவர் ரேவதி காளிமுத்து, சேசம்மாள் ஆகியோர்களையும் எனது சின்ன மாமனார் வடிவேல், ஆசிரியர் ஆகியோர்கள் 1ம் மனுதாரரிடம் அனுமதி கேட்டார்கள். 1ம் மனுதாரர் ஒத்துக் கொள்ளவில்லை. உறவினர்களை யாரையும் வைத்து நான் சேர்ந்து வாழ கேட்கவில்லை என்றால் மேலே நான் சொன்ன சில நபர்களில் என் உறவினர்கள் ஆவார்கள். எந்த தேதி, எந்த மாதத்தில் 1ம் மனுதாரரிடம் பேசுவதற்கு மேலே சொன்ன நபர்களிடம் பேசினேன் என்றால்

ஞாபகமில்லை. மேற்படி சங்கதிகளை எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வேறு ஒரு தேதிக்கு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/-)ஆர்.எம்.மாரிமுத்து,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.